பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 18 | வியாழக்கிழமை | 01.02.2024 | அதிர்வு 184 |
|---|---|---|---|---|---|

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பு



இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இலங்கை கனிய

06

## 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு



72 சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று காலை 6.30 முதல் நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வுள்ளன.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபா வருகை மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகளை தங்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

எவ்வாறாயினும், அனைத்து சிறுவர், புற்றுநோய் மற்றும் சிறுநீரக வைத்தியசாலைகளில் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைமுன்னெடுக்கப்படமாட்டாது என்று சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில்

06



# ஐக்கிய மக்கள் சக்தி தனிநபர் சொத்தல்ல

### சஜித்தை மறைமுகமாகப் போட்டுத் தாக்கும் பொன்சேகா கட்சியில் இருந்து வெளியேறமாட்டேன் என்றும் தெரிவிப்பு

**ஐக்கிய மக்கள் சக்தி என்பது தனிநபருக்குரிய சொத்து கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

**"ஐக்கிய மக்கள் சக்தியில் எமது பங்களிப்பும் உள்ளது. எனவே, கட்சியில் இருந்து வெளியேறும் திட்டம் இல்லை." - என்றும் அவர் குறிப்பிட்டார்**

07

## அதிக ஹெரோயின் பாவனையால் யாழில் மற்றுமோர் இளைஞர் சாவு!



அதிக ஹெரோயின் பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருபாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த கணேசன் நிஷாந் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம்

07



திருகோணமலையில் கடந்த 27ஆம் திகதி நடந்து முடிந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரனுக்கு, இதுவரை கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளராக இருந்த எம்.ஏ.சுமந்திரன் நேற்று எழுதிய கடிதம் வெளிப்பார்வைக்கு ஒரு கருத்தை தந்தாலும், அதற்குள் சூக்குமமாக புதைந்திருக்கும் அர்த்தங்கள் பல.

06



# கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

செங்கடலில் ஏற்பட்டுள்ள மோதலைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் 29 நாள்களில் 330 இற்கும் அதிகமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என இலங்கைத் துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு பணிப்பாளர் யூ.குமார தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கொழும்பு துறைமுகத்தில் கையாளப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான முனையங்களில் மாத்திரம் கடந்த 29 நாள்களில் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை, கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 60.9 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# உரிமையாளர்களால் விடுவிக்க முடியாத வழக்கு பொருள்கள் ஏலத்தில் விற்பனை

## கால தாமதத்தால் ஏற்படும் சேதாரத்தை தவிர்க்க இந்த ஏற்பாடு



உரிமையாளர்களால் விடுவிக்க முடியாத வழக்கு பொருள்களை ஏலத்தில் விற்பனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் பெறப்படும் பணம், அந்த வழக்குடன் தொடர்புடைய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வழக்கு நிறைவடைந்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர், கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, வழக்கு பொருளுக்கு உரிய நபர் வழக்கில் வெற்றி பெற்றால் அந்தப் பணம் அந்த நபருக்கு வழங்கப்படவுள்ளது. அவர் வழக்கில் தோல்வியடைந்தால் அதனை அரசுடைமையாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்காக நீண்ட காலம் செலவடப்படுகின்ற காரணத்தினால், பெரும்பாலான வழக்குப் பொருள்கள் அழிவடைகின்றமை தொடர்பில் கவனம் செலுத்தி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான சட்டத்திருத்தம் விரைவில் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடவுச்சீட்டுச் கட்டணம் இரு மடங்காக உயர்வு




சாதாரண கடவுச்சீட்டுச் சேவைகளுக்கான கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படும் என்று இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபாவாக அறவிடப்படவுள்ளது.

# மக்களின் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான 'உரித்து' வேலைத்திட்டம் 5 ஆம் திகதி ஆரம்பம்

## அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு



**"முறையான காணி உரிமையின்றி நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கும் 'உரித்து' வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பெப்ரவரி 05 ஆம் திகதி திங்கட்கிழமை தம்புள்ளையில் நடைபெறவுள்ளது. ரன் பூமி, ஜெய பூமி மற்றும் சுவர்ண பூமி போன்ற காணி அனுமதி பத்திரங்களை கொண்டிருந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர காணி உறுதி வழங்கப்படும்."**

**- இவ்வாறு சுற்றுலா, காணி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை நினைத்துப் பார்க்க வேண்டும். கடுமையான நோய்ப் பாதிப்புக்கு உள்ளான நோயாளியை போல இருந்தது.

அந்த நேரத்தில் நோயாளியின் விருப்பத்திற்கு சிகிச்சை அளிக்கவே பலரும் முன்வந்தனர். ஆனால் ஒருவர் மட்டுமே நோய்க்கு பொருத்தமான மருந்துகளை வழங்கினார். நோயாளிக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதை நோயாளி விரும்பாமல் இருக்கலாம்.

ஆனால் நோய் குணமாகிவிடும். நோயாளிக்கு தகுந்த சிகிச்சை வழங்கியதாலேயே நாடு சுமூக நிலைமைக்கு வந்துள்ளது.

நாம் யாருக்கும் சவால் விடுப்பதற்காக பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டின் வெற்றிக்காகவே பொறுப்புக்களை ஏற்றோம். அந்த சவாலை முடிந்தளவு வெற்றிகொள்வோம்.

கடந்த காலத்தில் சுற்றுலா கண்டிருந்த சரிவை சகலரும் அறிவர். அதன் இன்றைய நிலைமை தொடர்பிலும் அனைவரும் அறிவோம். சுற்றுலாத்துறை சடுதியாக அபிவிருத்தி கண்டுள்ளது.

தற்பொழுது கிரிக்கெட் தடையும் நீங்கியுள்ளது. பல வருடங்களுக்கு பின்னர் மேற்கிந்திய அணி ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்துள்ளது. அதுபோன்றதொரு எதிர்கால வெற்றியை நோக்கிச் செல்வதே எமது இலக்காகும்.

சந்தர்ப்பவாதிகள் சவால்களை ஏற்காமல் தப்பியோடுவர். ஆனால் நாடு அனைத்து துறைகளிலும் மோசமான வீழ்ச்சியினைக் கண்டிருந்தபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். அன்று அந்தச் சவாலை ஏற்காமல் இருந்திருந்தால் இன்று இந்த நாடு மனிதர்கள் இல்லாத பாலைவனமாக இருந்திருக்கும்.

காணி, காணி உறுதிப்பத்திரம், வீடு உள்ளிட்டவை கனவாக இருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதே தற்போது எமக்கு உள்ள சவாலாகும். எனவே, அதற்காக விசேட திட்டமாக "உரித்து" ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அதனால் இலங்கையின் இரண்டு மில்லியன் மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம். அதன்படி, ரன் பூமி, ஜெய பூமி மற்றும் சுவர்ண பூமி போன்ற அனுமதி பத்திரங்களை கொண்டிருக்கும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர காணி உறுதியை வழங்கவுள்ளோம்.

அதற்கான ஆரம்ப நிகழ்வு பெப்ரவரி 05 ஆம் திகதி தம்புள்ளையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அதன் பின்னர் நாட்டின் 14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளை உள்வாங்கி இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்று கொவி ஜனபத வேலைத்திட்டம் பல லட்சம் பேருடைய வாழ்க்கையை முன்னேற்றியது. மகாவலி வேலைத்திட்டம் பலரது வாழ்வில் ஒளியை ஏற்படுத்தியது. இன்று "உரித்து" வேலைத்திட்டத்தின் ஊடாக லட்சக் கணக்கிலானவர்களின் வாழ்வு மேம்படும். சுதந்திரத்தின் பின்னர் இவ்வாறானதொரு திட்டம் முதல் முறையாக முன்னெடுக்கப்படுகிறது. அதனால் இதனை வரலாற்று நிகழ்வாக கருத வேண்டும். வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும்."
– என்றார்.

# தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல விழா ஆரம்பம்

பருத்தித்துறை, தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல திருவிழா நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வரும் திருத்தல பரிபாலகருமாகிய அருட்பணி ஏ.எவ். பெனற் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்குச் திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

10ஆம் திகதி சனிக்கிழமை வழிபாட்டில் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும், ஆராதனையும், பவனியும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கும், 7.00 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். 7.00 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுப்பார்.

திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும் என்று திருத்தல பரிபாலகர் தெரிவித்துள்ளார்.

# சீனாவின் நிவாரணப் பொதி விநியோகத்தை கிளிநொச்சியில் முன்னெடுக்கும் ஜே.வி.பி.!




(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 150 குடும்பங்களுக்கு நேற்றைய தினம் சீனாவின் நிவாரணப் பொதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

சீனாவின் நிவாரணப் பொதிகளை பயனாளிகளிற்கு ஜே.வி.பி. அரசியல் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் வழங்கி வைத்தார்.

இதனை வழங்கி வைத்து உரையாற்றிய சந்திரசேகரன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் உருவாகவுள்ள தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு சீனா, இந்தியா உட்பட அனைவரும் உதவ முன்வந்துள்ளனர் என்றார்.

எமது ஆட்சியில் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளோடு சமாந்தர நிலையில் உறவுகளைப் பேணி இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

ஒருவரை அரவணைத்து மற்றவரை புறந்தள்ளும் வேலை கிடையாது என்றார் அவர்.








# இந்த மாதத்தில் நாட்டின் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் இந்த மாதமும் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த டிசம்பர் மாதத்தில் 4 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் ஜனவரி மாதத்தில் 6.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அதேநேரம், உணவு பணவீக்கம், கடந்த டிசம்பர் மாதத்தில் 0.3 சதவீமாக காணப்பட்ட நிலையில், ஜனவரி மாதத்தில் 3.3 சதவீமாக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உணவல்லாப் பணவீக்கம் கடந்த டிசம்பர் மாதம் 5.8 சதவீதமாக காணப்பட்ட நிலையில், ஜனவரி மாதத்தில் 7.9 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# ஊழல் மிகுந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 115ஆவது இடம்தான்

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 115 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

0 (அதிக ஊழல்) - 100 (ஊழலற்ற நாடு) எனும் அளவில் நாடுகளை மதிப்பீடு செய்து ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நாடுகளை தரப்படுத்துகின்றது.

இந்த பட்டியலில் 180 நாடுகள் தரப்படுத்தப்படுகின்றன.

இந்த பட்டியலுக்கு அமைய, இலங்கை 2023 ஆம் ஆண்டு 115 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் இலங்கை 117 ஆவது இடத்தில் இருந்தது.

இலங்கையுடன் ஈக்வடோர் , இந்தோனேஷியா , மலாவி, பிலிப்பைன்ஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் 115 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளன.

ஊழலற்ற நாடாக டென்மார்க் முதல் இடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து, பின்லாந்து, நியூசிலாந்து, நோர்வே மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் உள்ளன.

சோமாலியா, வெனிசுலா, சிரியா, தெற்கு சூடான் மற்றும் ஏமன் ஆகியவை குறியீட்டில் கடைசி இடங்களைப் பிடித்துள்ளன.

நீதித்துறை பலவீனப்படுத்தப்படல், அரச அதிகாரிகளிடம் பொறுப்புக்கூறல் குறைதல் என்பன ஊழல் அதிகரிக்க காரணமாகவுள்ளன என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் சுட்டிக்காட்டியுள்ளது.

# யாழில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது



சட்டத்தினால் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்குடன் உடைமையில் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.கைது செய்யப்பட்டவரிடமிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் வைத்து 26 வயதுடைய ஒருவரே இன்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிறேமதிலக தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

தமிழரசுச் சர்ச்சை குறித்து அதிகம் பேசும் பலரும் கட்சியின் யாப்பை ஒருதரமேனும் வாசித்திருப்பார்களோ தெரியவில்லை.

இதுவரை கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா கூட கட்சியின் யாப்பைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் என் கணிப்பீடு. மாவை தலைவராக இருந்த போது நடந்து கொண்ட விதங்கள் இதற்கு நல்ல சான்று.

தமிழரசின் யாப்பின்படி கட்சி செயற்பாடுகளில் அதிகாரம் பெருமளவு பொதுச் செயலாளர் வசமே உள்ளது. தலைவர் வசம் அல்ல.

2013 மாகாண சபை தேர்தல் சமயத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்சி நடவடிக்கைகளின் போதுதான் அப்போது கட்சி தலைவராக இருந்த சம்பந்தனும் இதனைச் செயற்பாட்டு ரீதியாக உணர்ந்து கொண்டார். அச்சமயம் கட்சிச் செயலாளராக இருந்த மாவையின் நாடியைத் தடவாத குறையாக, அவரைத் தாஜா பண்ணியே தன்னால் காரியமாற்ற வேண்டி இருந்தது என்பதை உணர்ந்த சம்பந்தன், அடுத்த வருடமே தான் தலைவர் பதவியிலிருந்து இறங்கி, மாவைக்கு 'புறமோஷன்' கொடுப்பது போல தலைவர் பதவியைக் கையளித்து, தன் ஆளான துரைராஜசிங்கத்தைப் பொதுச் செயலாளராக்கிக் கட்சிக் கட்டுப்பாட்டை வெளியே தெரியாமல் தன் வசப்படுத்திக் கொண்டார்.

2020 தேர்தலின் பின்னர் தேர்தலில் தோற்றுப் போன கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா கட்சிக்குக் கிடைத்த தேசிய பட்டியல் எம்.பி. பதவியை தான் பெற விரும்பினார். ஆனால் கட்சித் தலைவரான அவருக்கே தெரியாமல் அந்தப் பதவியை இன்னொருவருக்கு வழங்கும் அதிகாரம் கட்சிச் செயலாளருக்கு இருந்தது. அதுதான் நடந்தது. அதற்கு எதிராகத் தலைவராலோ கட்சியாலோ அப்போது பொதுச்செயலாளருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்க முடியவில்லை. அவ்வளவு வலிமையான பதவி நிலை பொதுச்செயலாளருடையது. எனினும் மத்திய குழுவில் தம்மை பலரும் மோசமாக விமர்சனம் செய்தனர் என்ற மன ஆதங்கத்தில் துரைராஜசிங்கம் பின்னாளில் பதவி விலகியமை வேறு விடயம். அது கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையால் விளைந்த மாற்றம் அல்ல.

தலைவரின் முடிவுக்கு மாறாகக் கட்சிச் செயலாளர் தம் இஷ்டப்படி தேசிய பட்டியல் எம்.பி. நியமனத்தைச் செய்தால் கூட அதைத் தடுக்க முடியாத அளவில் செயலாளருக்கு வலிமை உண்டு.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை கடந்த வாரம் வரை அதன் பதில் பொதுச் செயலாளராக இருந்தவர் அல்லது இருப்பவர் டாக்டர் சத்தியலிங்கம். அவர் அன்றைய மத்திய குழுக் கூட்டத்துக்கும் பொதுக் குழு கூட்டத்திற்கும் வராதமையால் அந்தப் பொறுப்பு பிரதிப் பொதுச் செயலாளர் சுமந்திரனைச் சேர்ந்ததாக இருந்தது. அதே சமயம் கூட்ட அறிக்கைப் பதிவுகளை மேற்கொள்பவர் கட்சியின் நிர்வாக செயலாளராக இருந்த குலநாயகம். அன்றைய கூட்டத்தில் தெரிவான புதிய பொதுச்செயலாளர் குகதாசன்.

இந்த நால்வரில் எவருமே அன்றைய பொதுக்குழுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவில்லை என்ற நிலைப்பாட்டை புதிய தலைவர் சிறீதரனுடனோ அல்லது மாவை சேனாதி ராஜாவுடனோ சேர்ந்து எடுக்கப் போவதில்லை என்பது ஓரளவு ஊகிக்கத்தக்கது.

இந்தப் பின்புலத்தில்தான் அன்றைய தெரிவுகளை அந்தரத்தில் வைத்திருக்கும் சிறீதரன் மற்றும் மாவையின் திட்டம் சட்ட ரீதியாகத் தாக்குப் பிடிக்காது, அதுவலிமையற்றதுஎன்றுநான்நினைக்கிறேன்.

கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் செல்லுபடியற்றவை என்று கருதி, அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை சிறீதரன் எடுப்பதற்கு சட்ட ரீதியான கட்சி நிர்வாகிகள் சிறீதரன் பக்கம் இல்லை. அதுதான் யதார்த்தம்.

தாம் அல்லது மாவை கட்சித் தலைவர் என்ற பெயரில் தனித்து இந்த விடயங்களை முன்னெடுக்க முடியாது என்பது சிறீதரனுக்குப் புரிய வேண்டும்.

பழைய நிர்வாகம்தான் இன்னும் அதிகாரத்தில் இருக்கின்றது என்ற சிறீதரனின் கருதுகோள் சரி என்றால், அதை ஏற்று மீண்டும் பொதுக்குழுவைக் கூட்டுவதற்கு டாக்டர் சத்தியலிங்கமோ அல்லது அவர் இல்லாவிட்டால் பிரதிப் பொதுச் செயலாளர் சுமந்திரனோதான் அதற்கு அழைப்பு அனுப்ப வேண்டும்.

மறுபுறத்தே 27ஆம் திகதி தெரிவான புதிய நிர்வாகம் ஏற்புடையது என்றால் இனி நடக்கக்கூடிய மாநாட்டுக்கும் கூட்டங்களுக்கும் குகதாசன்தான் அழைப்பு அனுப்ப வேண்டும்.

எப்படி நகர்ந்தாலும் மாவை - சிறீதரன் கூட்டுக்கு இதில் நடைமுறைச் சிக்கலும் சட்டச் சிக்கலும் வெகு தாராளம்.

இனி சுமந்திரன் நேற்று சிறீதரனுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் உட்கிடையாக வலியுறுத்தப்பட்டிருக்கும் கருத்து நிலைபாடுகளை பார்ப்போம்:-

1. கட்சியின் நிர்வாகிகள் தெரிவு நடந்து முடிந்து விட்டது.

2.இப்போது கட்சியின் தலைவர் சிறீதரன்தான்.

3.மாவை சேனாதிராஜா கட்சியின் முன்னாள் தலைவர். இப்போது கட்சியின் உறுப்பினர். அவ்வளவுதான்.

4. கட்சியின் பொதுக்குழு கூட்டம் முடிவுக்கு விட்டது. இனி மாநாட்டின் பொது அமர்வை - சம்பிரதாயபூர்வ நிகழ்வை - முன்னெடுப்பதே பாக்கி. புதிய செயலாளர் குகதாசனை வைத்து அந்தப் பணி முன்னெடுக்கப்பட வேண்டும்.

5. கடந்த 27 ஆம் திகதி மாலையில், அடுத்த நாள் தேசிய மாநாடு நடைபெறாது, அது ஒத்திவைக்கப்பட்டது என்று மாவை சேனாதிராஜா அறிவித்தமை 'அதிகாரம் அற்றது; சட்டத்துக்கு முரணானது' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

- இந்த விடயங்களை கவனத்தில் எடுக்காமல் சிறீதரன் நடக்கலாம். காலத்தை இழுத்தடிக்கலாம்.

ஆனால் 2004 பொதுத்தேர்தல் சமயம் உதயசூரியன் சின்னம் இல்லாமல் போனபோது கைவசம் வீட்டுச் சின்னம் உட்பட பல சின்னங்கள் தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகளிடமிருந்தன.

இன்னும் 8 மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல். அது முடிந்து அடுத்த நாளே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படக்கூடிய வாய்ப்புகள் மிகத் தாராளமாக உண்டு.

இப்போது கட்சி தலைவராகியிருக்கும் சிறீதரன் புத்திசாதுரியமாக நடந்து வீட்டு சின்னம் ஒருவருமே பாவிக்காமல் முடக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அப்படி ஏதும் நேர்ந்தால் வீடும் இல்லை, வேறு சின்னமும் இல்லை என்று குத்துவிளக்கில்தான் போய் ஒண்ட வேண்டி நேரும்.

வருமுன் காத்துக் கொள்வது புத்திசாலித்தனமானது.

## 72 சுகாதார தொழிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஈடுபடப்போவதில்லை என்று அகில இலங்கை தாதியர் சங்கமும் அறிவித்துள்ளது.

முன்னதாக, வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவைக் கோரி சுகாதாரத் துறையினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று உறுதியளிப்பட்டதையடுத்து பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், மேற்படி பேச்சு நடத்துவதற்கு இதுவரையில் சந்தரப்பம் வழங்கப்படாததையடுத்து மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக 72 சுகாதார தொழிற்சங்கங்கள் அடங்கிய சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்வதா? இல்லையா? என்பதை இன்று பிற்பகல் கூடி தீர்மானிக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளது.

மேற்படி ஊடக சந்திப்பில், அந்தக் கூட்டமைப்பின் அழைப்பாளர் ரவி குமுதேஷ், இணை அழைப்பாளர் உபுல் ரோஹன, அரச சுகாதார முகாமைத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நாமல் ஜயசிங்க, அரச மருந்தாளுநர் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள்களின் விலை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 371 ரூபா ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 456 ரூபா ஆகும்.

இதேவேளை ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 363 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 468 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 262 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிபெட்கோவின் புதிய விலைக்கு ஏற்ப லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் எரிபொருள்களின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.



# பேராதனைப் பல்கலை மாணவர்கள் போராட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

வற வரியைக் குறைத்தல் மற்றும் மாணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர் விடுதிக்கு அருகில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம், கலஹா சந்திக்கு வந்தபோது அதனைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதையடுத்துப் பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டது.

## அதிக ஹெரோயின் பாவனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் இரவு உணவருந்தி விட்டு தூக்கத்துக்குச் சென்றுள்ளார். இந்நிலையில் வீட்டில் உள்ளவர்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் அவரை அவதானித்தவேளை அவர் அசைவற்று காணப்பட்டார்.

காலை 5 மணியளவில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் போது, அவர் அதிக ஹெரோயின் பாவனை காரணமாக உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது.

இதேவேளை, அண்மைய காலமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு போதைப் பயன்பாடு காரணமாக பலரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதால் சரத் பொன்சேகா கடும் அதிருப்தியில் இருக்கின்றார் எனவும், கட்சியை விட்டு வெளியேறவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தயா ரத்நாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொண்டமை தொடர்பில் கட்சித் தலைவர் மற்றும் செயலாளரிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளேன் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மேலும் குறிப்பிட்டார்.




## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# மன்னிக்க முடியாதவர்கள்

தமது வாக்கு வங்கியைப் பெருக்கிக் கொள்ளவும், தக்க வைக்கவும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கைக் கையில் எடுத்தனர் ராஜபக்ஷக்கள்.

பஞ்சசீலம் போதிக்கும் உயர்ந்த - உத்தம - மதம் அல்லது மார்க்கம் பௌத்தம். அந்த உத்தம மதத்தின் பெயரால் இலங்கையில் உன்மத்தம் பிடித்தோர் போடும் இனவெறி ஆட்டம் பௌத்த கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது.

பௌத்தத்தின் பெயரால், அந்த மதத்தை நடைமுறைப்படுத்துகின்றோம் என்று வெறியில், ஆட்சியாளர்கள் - குறிப்பாக ராஜபக்ஷக்கள் - செய்த இரண்டு காரியங்கள் மன்னிக்கவே முடியாத பெரும் குற்றங்கள். பௌத்த தர்மம் மட்டுமல்ல, உலகின் எந்த உயர்ந்த மதமும் - மார்க்கமும் - அந்த அட்டூழியத்தை நியாயம் என்று ஏற்றுக் கொள்ளாது. சாத்தானின் வேதத்தின் கீழ் கூட நியாயப்படுத்த முடியாத கொடூரங்கள் - அட்டூழியங்கள் - அவை.

இறந்த - மரணித்த - நம்மைப் பிரிந்த - ஆத்மாக்களுக்கு எதிராகப் புரியப்பட்ட காட்டுமிராண்டித்தன நடத்தை அவை. மனித குல மாண்புகளுக்கு அவப்பெயர் தேடித் தந்த செயற்பாடுகள் அவை.

மரணித்தவர்களை மதிப்பதுதான் அனைத்து மதங்களும் நமக்கு கற்றுத் தந்த பாடம். புண்ணிய ஆத்மாவாக இருந்தாலும், பாவம் செய்தவராக இருந்தாலும் உயிரிழந்தவரின் உடலை மதிப்பதும், அவர்களின் மீளாத் துயிலுக்கு குந்தகம் விளைவிக்காமல் இருப்பதும் மதங்கள் போதிக்கும் மாண்பு. மனிதப் பண்பாடும் கூட.

அதனைத்தான் சிங்கள அரசனான துட்டகெமுனு கூடப் போதித்தான். தமிழ் மன்னனான எல்லாளனை வென்ற போதும் எல்லாளனுக்கு சமாதியும் சிலையும் எழுப்பி அவற்றை வணங்க வைத்தமை மூலம் தன் மக்களை நெறிப்படுத்தினான் அந்த மன்னன்.

ஆனால் இவை எல்லாவற்றுக்குமே முரணாக - பௌத்தத்தைப் போற்றுவதாகக் கூறிய ராஜபக்ஷக்கள் இறந்த மனிதர்கள் தொடர்பில் இரண்டு பெரும் கொடூரங்களைப் புரிந்தனர்.

ஒன்று - விடுதலைப் போரில் மாவீரர்களான பல்லாயிரம் தமிழ்ப் போராளிகள் மீளாத்துயில் கொண்டிருந்த மாவீரர் துயிலும் இல்லங்களை புல்டோசர் கொண்டு உழுது அழித்து, அவர்களுக்கான நடுக்கற்களையும் சமாதிகளையும் சின்னாபின்னமாக்கி, சிங்கள வெறித்தனத்தையும், மனித குலத்தின் மாண்புகளுக்கு மாறான காட்டுமிராண்டித்தனத்தையும் வெளிக்காட்டினர்.

இரண்டு - கொரோனாத் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும், கிறிஸ்தவர்களின் பூதவுடல்களையும் உலகநியதி, விஞ்ஞானக்காரணங்கள், உண்மை நிலைமை ஆகியவற்றுக்கு முரணாக விளக்கங்களைக் கூறி வல்வந்தமாக எரித்து இன வெறி காட்டினார்கள்.

மனித வாழ்வியலுக்குப் பொருந்தி வராத இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை புரிந்த ராஜபக்ஷக்களும் அவர்களுக்கு துணைபோன பௌத்த - சிங்கள இன வெறியாளர்களும் இலங்கைத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களாலும் முஸ்லிம்களாலும் என்றும் கௌரவத்திற்கு உரியவர்களாக மதிக்கப்படவே மாட்டார்கள்.

ஜனாஸாக்களை வல்வந்தமாக எரிக்கும் கொடூரத்தின் பின்புலத்தில் சூத்திரதாரியாக இருந்தவர்களில் ஒருவரான பேராசிரியர் சன்ன ஜயசுமணவை ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக்குள் உள்வாங்கினால் அக்கூட்டணியில் இருந்து வெளியேறுவோம் என்று முஸ்லிம் கட்சிகள், அந்தக் கூட்டணியின் தலைவரான சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துவிட்டன. அதனால் மொட்டுக் கூட்டணியிலிருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைய வந்த பேராசிரியர் சன்ன ஜயசுமணவை நிராகரித்து விட்டார் சஜித்.

அதனால் எல்லா தரப்புக்களினாலும் நிராகரிக்கப்பட்டு தனித்து அல்லாடும் சம்பிக்க ரணவக்க, ரொஷான் ரணசிங்க போன்றோருடன் சேரும் இக்கட்டுக்கு பேராசிரியர் சன்ன ஜயசுமணவும் தள்ளப்பட்டுள்ளார்.

அதே நிலைமைதான் ராஜபக்ஷக்களுக்கும். அதை சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்களில் ஒருவரான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வெளிப்படையாகவும் தெளிவாகவும் இப்போது கூறியிருக்கின்றார்.

"ராஜபக்ஷக்கள் அரங்கேற்றிய அட்டூழியங்கள் மன்னிக்க முடியாதவை. அவற்றை மன்னிக்க நாங்கள் தயாரில்லை. ஆகவே ஒரு கையால் ராஜபக்ஷக்களைக் கட்டி அணைத்தபடி, மறுகையால் எம்மைச் சுட்டி அழைக்க வேண்டாம். கோட்டாபய ராஜபக்ஷ போனாலும், அவர் புரிந்த பாவத்தின் நிழல் போகவில்லை." - என்று ராஜபக்ஷக்களுடன் அணி சேர்ந்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துரைத்திருக்கிறார் மனோ கணேசன்.

இறந்த ஆத்மாக்கள் மீதும் கொடூரம் புரிந்த இழிசனர்களை இந்த நாட்டின் சிறுபான்மையினர் எக்காரணம் கொண்டும் மன்னிக்கவே மாட்டார்கள்.

# இலங்கை தமிழர்களுக்கு மகளிர் உரிமை தொகை

## தமிழக அரசின் முடிவு



தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தை தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது.

அதற்கமைய கடந்த வருடம் செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடியே 15 லட்சம் பெண்கள் மாதந்தோறும் 1000 ரூபா உரிமைத் தொகை பெற்று வருகிறார்கள்.

இந்த திட்டத்தில் பயன்பெற மேலும் பல லட்சம் பெண்கள் மேல்முறையீடு செய்து காத்திருக்கின்றனர். இந்த நிலையில் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு இத்திட்டத்தை மேலும் விரிவு படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, மேல்முறையீடு செய்துள்ளவர்களில் சில லட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு விரைவில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட உள்ளது.

இதனை தொடர்ந்து தற்போது தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள முகாம்களில் 19 ஆயிரத்து 487 இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்தக் குடும்பத்துப் பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் வகையில் அவர்களின் வங்கிக் கணக்கு விவரங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதமே அவர்களுக்கான உரிமைத் தொகை வங்கியில் வரவு வைக்கப்படும் என்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதம் ஏற்பட்டால் மார்ச் முதல், முகாம்களில் வசிக்கும் குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கும் மகளிர் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் கைது! அவர் ராஜினாமா; புது முதல்வர் சம்பாய் சோரன்



சுரங்க முறைகேடு வழக்கில் ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் 6 மணி நேர விசாரணைக்குப் பிறகு நேற்று அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக முதலமைச்சர் பதவியில் இருந்து ஹேமந்த் சோரன் ராஜினாமா செய்தார். அம்மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து தனது ராஜினாமாக் கடிதத்தை அவர் வழங்கினார்.

அதனை அவர் ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் ஹேமந்த் சோரன் அமைச்சரவையில்போக்குவரத்துத்துறைஅமைச்சராக இருந்த சம்பாய் சோரன், புதிய முதல்-மந்திரியாக பதவியேற்க உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஜார்க்கண்ட் தலைநகரில் பதற்றம் நிலவி வருகிறது. தலைநகர் ராஞ்சியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 7,000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஜார்க்கண்டில்காங்கிரஸ்-ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில முதலமைச்சராக ஹேமந்த் சோரன் செயல்பட்டு வந்தார்.

நிலமோசடி மூலம் கோடிக்கணக்கான பணத்தை சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்தார் என முதலமைச்சர் ஹேமந்த் சோரன் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது. மேலும், இந்த வழக்கில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகும்படி ஹேமந்த் சோரனுக்கு அமலாக்கத்துறை பலமுறை சம்மன் அனுப்பியும் அவர் ஆஜராகவில்லை. இறுதியில் கடந்த 20ஆம் தேதி அமலாக்கத்துறை முன் ஹேமந்த் சோரன் ஆஜரானார். அவரிடம் வழக்கு தொடர்பாக பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம் டில்லியில் உள்ள ஹேமந்த் சோரன் இல்லத்தில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் 36 லட்ச ரூபா பணம் மற்றும் பி.எம்.டபிள்யூ. கார் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இதனை தொடர்ந்து, ஜார்க்கண்ட் முதல்-மந்திரி ஹேமந்த் சோரனிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தினர். ராஞ்சியில் உள்ள ஹேமந்த் சோரனின் வீட்டிற்கு வந்த அமலாக்கத்துறை அதிகாரிகள் அவரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை மேற்கொண்டனர்.

# ராகுல் காந்தி பயணித்த வாகனத்தின் மீது தாக்குதல்

## பீகாரில் பரபரப்பு



பீகாரில் ராகுல் காந்தி பயணித்த கார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராகுல் காந்தியின் 'இந்திய ஒற்றுமை நீதி நடைபயணம்' தற்போது பீகார் மாநிலத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே பீகார் – வங்காள எல்லை அருகே கட்டிஹார் நகரில் வைத்து ராகுல் காந்தி பயணித்த கார் மீது மர்மநபர் ஒருவர் கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அந்த காரின் பின்பக்கக் கண்ணாடிகள் கடுமையாக சேதமடைந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இம்ரான் கானின் மனைவிக்கும் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் மனைவி புஷ்ரா பீபிக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றில் தீர்ப்பளித்துள்ளது.

ஊழல் செய்தனர் என இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கில் இம்ரான்கானின் மனைவிக்கு இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது பல்வேறு ஊழல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. எனினும், அந்த வழக்குகள் அரசியல் பழிவாங்கல் காரணமாக தொடரப்பட்டன என இம்ரான் கான் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

தோஷகானா ஊழல் வழக்கில் இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தண்டனையை எதிர்த்து இம்ரான் கான் மேன்முறையீடு செய்துள்ள நிலையில், ஏனைய வழக்குகளில் பிணை கிடைக்கவில்லை.

இதற்கிடையே, அரச இரகசியங்களை கசியவிட்டனர் என தொடரப்பட்ட வழக்கில், இம்ரான் கான் மற்றும் அவரது உதவியாளர் ஷா முகமது குரேஷி ஆகியோருக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நேற்று முன்தினம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில், நேற்று மேலும் ஒரு ஊழல் வழக்கில் இம்ரான் கான், அவரது மனைவிக்கு தலா 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்த போது, அவருக்கும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கும் கிடைத்த பரிசுப்பொருள்களை அரசிடம் ஒப்படைக்காமல் ஊழல் செய்தனர் என தொடரப்பட்ட வழக்கில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இதன்போது, இருவருக்கும் தலா 14 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் இருவரும் 10 ஆண்டுகளுக்கு அரச பதவிகளை வகிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவின் புதிய மன்னர் பதவியேற்பு





மலேசியாவின் புதிய மன்னராக ஜோகூர் ஆட்சியாளர் சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் பதவியேற்றுள்ளார்.

அதன்படி, மலேசியாவின் 17 ஆவது மன்னராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாநில அந்தஸ்து வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் மலேசிய பிரதமர் அன்வார் இப்ராகிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மலேசியாவின் தெற்கு மாநிலத்தின் இரண்டாவது ஆட்சியாளர் சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் பொருளாதாரத்தில் அதிக பங்காற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாரத்தில் 4 நாள்கள் மட்டுமே வேலை: சோதனை முயற்சியில் இறங்கியது ஜெர்மனி

உலகம் முழுவதும் பல வளர்ந்த நாடுகள் குறைவான வேலை நேரத்தை செயற்படுத்த ஆரம்பித்துள்ளன.

பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், அவுஸ்ரேலியா, ஜப்பான், ஸ்பெயின், பிரிட்டன் போன்ற நாடுகள் குறைந்த வேலை நேரத்தை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், ஜேர்மனியும் இந்த பட்டியலில் இணைகிறது.

ஜெர்மனியில் பெப்ரவரி முதலாம் திகதி முதல் வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரமே வேலை நாள்கள் எனும் முன்னோடித் திட்டம் அறிமுகமாகிறது. இந்த திட்டத்தை 6 மாதங்களுக்கு சோதனை முயற்சியாக ஜெர்மனி முன்னெடுத்துள்ளது.


பொருளாதார மந்தநிலை, திறமையான தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை, அதிக பணவீக்கம் போன்றவற்றுடன் ஜேர்மனி தற்போது போராடி வருகிறது.

இந்நிலையில், பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு சோதனை முயற்சியாக வேலை நாட்களை ஜெர்மனி குறைக்கிறது.

வாரத்தில் 4 வேலை நாட்கள் மாத்திரம் இருப்பது ஊழியர்களை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருந்து, உற்பத்தி திறனை மேம்படுத்துமா என பரிசீலிக்கவுள்ளது.

இந்த சோதனை முயற்சியில் ஜெர்மனியின் 45 நிறுவனங்கள் இணைகின்றன. இது நல்ல பலன்களை தரும் என தொழிற்சங்கங்களும் அரசும் எதிர்பார்க்கின்றன.

உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலம் ஜெர்மனியில் நிலவும் குறைந்த பணியாளர்கள் பிரச்சினையும் தீர்வுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# அறிவு மிக்க சமூகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அறிவு மற்றும் பண்பு மிக்க சமூகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த பட்டப் படிப்புப் பிரிவின் புதிய கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றிகொள்ள புத்த பெருமானின் போதனைகள் மிக முக்கியமானது. அத்தகைய தர்மத்தின் ஆழத்தை அறிந்து அதனை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தேரவாத பௌத்தத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கையைச் சார்ந்துள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காக தேரவாத பௌத்த ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.



இவ்வாறான நிறுவனங்களுக்குத் தேரவாத பௌத்தத்தை உலகுக்குக் கொண்டுச் செல்லவும், பௌத்த நாடுகளுடனான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வதற்குமான இயலுமை உள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப யுகத்துக்குத் தேவையான வகையில் இலங்கையின் கல்வியைப் பலப்படுத்த எதிர்பார்ப்பதோடு, அனைத்து பல்கலைக்கழங்களிலும் செயற்கை நுண்ணறிவு கற்கை நெறிகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், பாலி மற்றும் பௌத்த பட்டப் படிப்பு நிறுவனத்தில் கற்கும் மாணவர்களின் விருப்பத்துக்கிணங்க மாணவர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கான காணியையும் அரச அனுசரணையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்கு உதவிய



வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“2019 ஆம் ஆண்டில் இந்தக் கட்டட நிர்மாணத்துக்கு அடிக்கல் நடுவதற்குப் பிரதமராக வந்திருந்தேன். இன்று



கட்டடத்தைத் திறப்பதற்கு ஜனாதிபதியாக வந்துள்ளேன். கொரோனாத் தொற்று பரவலால் இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் தாமதமாகியிருந்தன. வித்யாலங்கார பல்கலைக் கழகத்தின் பாலி மற்றும் பௌத்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு ரதனசார தேரர் முன்னெடுத்திருந்த செயற்பாடுகள் சிறப்பானவையாகும். அதேபோல் கொடபிடிய ராஹுல நிறுவனத்தின் தேரரும் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

பௌத்த நாடுகளில் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் தேரவாத பௌத்தத்தைப் பற்றிய தெரிவை வழங்கக்கூடிய பொறுப்பு எமக்கு உள்ளது. மேலும், இந்த நிறுவனங்களின் மூலம் தேரவாத நாடுகளிடையே உறவுகளை வலுப்படுத்த முடியும்.” – என்றார்









# பெப்ரவரி 04 தமிழர் தேசத்தின் கறுப்பு நாள் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 04 ஆம் திகதியை தமிழர் தேசத்தின் கறுப்பு நாளாக அனுஷ்டிக்கக் கோரும் அழைப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது. இது தொடர்பாக மாணவர் ஒன்றியத்தின் ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவடிவம் வருமாறு:-

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே.

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத்திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04, 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு, தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களிற்கான அரசியற் தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவுற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத் தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4, 2024 ஆம் நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம். - என்று உள்ளது.




# மாவீரர் தின விடயங்களில் மிகத் திறம்படச் செயல்படும் புலனாய்வுப் பிரிவினர் வடிசாராய விடயத்தில் பாராமுகம்

## ஏன் என்று கேள்வி எழுப்புகின்றார் சாணக்கியன் எம்.பி.

மாவீரர் தின நாள்களில் திறம்பட செயல்படும் புலனாய்வுப் பிரிவினர் சட்ட விரோத வடி சாராயப் பிரச்சனையில் உண்மைகளைக் கண்டறியத் திணறுவது ஏன் என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

வவுணதீவு மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நேற்றைய தினம் இடம்பெற்றது.

வடி சாரயப் பிரச்சனை மட்டக்களப்பில் பரவலாக பல இடங்களில் காணப்படுகின்றது. இருப்பினும் புலனாய்வுப் பிரிவினர் வருடத்துக்கு ஒரு முறை மக்களுக்காக உயிர் நீர்த்த தத்தம் உறவுகளை நினைவு கூறி அஞ்சலி செய்யும் நாள்களில் நடக்கும் சம்பவங்களை மாத்திரம் புலனாய்வு செய்து கைதுகளை மேற்கொள்கின்றனர். அதில் கேக் கொடுத்தவர், வெட்டியவர் போன்றோரைக் கூட கைது செய்தார்கள். ஆனால் வருடம் முழுவதும் ஒவ்வெரு நாளும் நடக்கும் வடி சாரயப் பிரச்சினைக்கு மாத்திரம் முற்றுப் புள்ளி வைக்க முடியவில்லை. அதற்கான காரணம் என்ன? – என்று இக்கூட்டத்தில் கேள்வி எழுப்பினார் சாணக்கியன் எம்.பி.















# சிநேகபூர்வ மக்கள் சந்திப்புகளை ஆரம்பித்தார் வட மாகாண ஆளுநர்

மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை கிராமங்களுக்கே சென்று ஆராயும் நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆரம்பித்துள்ளார்.

பல கிராமங்களின் மக்களை சனசமூக நிலையங்களூடாக ஒன்றிணைத்து, அவர்களுடன் ஆளுநர் சந்திப்புக்களை நடத்த வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய முதலாவது சிநேகபூர்வ மக்கள் சந்திப்பு யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களை ஆளுநர் நேற்று முன்தினம் மாலை சிநேகபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. அந்த வகையில், காணி உறுதி இன்மை, வீட்டுத்திட்டம் கிடைக்காமை, கிணறுகள், சிறு குளங்கள் புனரமைக்கப்படாமை, வீதி சீரின்மை, மைதானம் இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கிராம மக்கள் ஆளுநருடன் கலந்துரையாடினார்கள்.

இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் , நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கருத்து தெரிவிக்கப்பட்டது. தொழில் இன்மை, பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கான வசதிகள் இன்மை, போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், பாடசாலை இடைவிலகல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் கேட்டறிந்த கௌரவ ஆளுநர், அபிவிருத்தி திட்டங்கள் கிராம மட்டத்தில் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமை தொடர்பில் கவலை தெரிவித்தார். கிராமங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், அந்ததந்தக் கிராம மக்கள் விரும்பி , உரிமை கோரும் செயற்திட்டங்களாக அமைய வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன், அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களின் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஆளுநர், அந்த விடயங்கள் தொடர்பில் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை சமர்பிக்குமாறும் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.






# இலங்கையில் விடுமுறையைக் கழியுங்கள்!

## இந்தியர்களுக்கு ஜெய்சங்கர் ஆலோசனை



இலங்கையில் விடுமுறையைக் கழியுங்கள் என்று இந்திய மக்களிடம் இலங்கைக்காகப் பிரசாரம் செய்திருக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

மும்பையில் நடந்த நிகழ்வொன்றில் பேசிய ஜெய்சங்கர் அச்சமயம் இதனை எடுத்துரைத்தார்.

சீனா இந்தியாவின் அண்டைய நாடு என்பதால் இயற்கையாகவே இரு நாடுகளுக்கும் இடையில் போட்டி அரசியல் நிலவும் எனவும் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

"எரிபொருள் தட்டுப்பாடு, உணவுப் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு என பல்வேறு நெருக்கடிகளை இலங்கை எதிர்கொண்டிருந்தது.

"உலகமே பின்வாங்கிய போது இந்தியா 4.5 பில்லியன் டொலர் உதவிகளை இலங்கைக்கு வழங்கியது. இது சர்வதேச நாணய நிதியத்தின் உதவிப் பொதியை விட ஐம்பது வீதம் அதிகமாகும்.

உங்களுக்கு எனது முதல் அறிவுரையானது அடுத்த முறை நீங்கள் விடுமுறை எடுக்க விரும்பினால், இலங்கைக்குச் செல்லுங்கள். அங்குள்ள சராசரி மனிதர்களிடம் பேசுங்கள். இந்தியாவைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேளுங்கள். அந்தப் பதிலைக் கொண்டு இந்தியா வளர்வதை உணர்வீர்கள்." எனவும் அவர் தெரிவித்தார்.

சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு உட்பட, பிராந்தியத்தின் புவிசார் அரசியல் யதார்த்தங்களையும் அவர் ஒப்புக்கொண்டார்.

"சீனா எமது அண்டை நாடு, மற்றும் போட்டி அரசியலில் இயற்கையாகவே பங்கு வகிக்கும். ஆனால் நாம் பயப்படக் கூடாது. உலகளாவிய அரசியல் ஒரு போட்டி விளையாட்டு. நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள், நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்வோம்." எனவும் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு அதன் அர்ப்பணிப்பை முன்கூட்டியே வெளிப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

# சீனாவின் நுழைவு அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு இலங்கையுடன் உறவை அவதானமாகக் கையாளுங்கள்

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வைகோ ஆலோசனை

சீனாவின் நுழைவு அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, இலங்கையுடனான உறவை இந்திய அரசு அவதானத்துடன் கையாள வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ வலியுறுத்தியுத்தியுள்ளார்.

புதுடெல்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே வைகோ இதனைக் கூறினார்.

அம்பாந்தோட்டையில் சீனா துறைமுகம் அமைத்துள்ளது. சீனாவிடமிருந்து நாட்டுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் தெற்கில் இருந்து (இலங்கையின்) முதலில் வெளிப்படும் என்பதை இந்திய அரசு உணர வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் குறித்தும் ராஜ்நாத் சிங்கின் கவனத்தை வைகோ



ஈர்த்தமையுடன், இதுவரை 800க்கும் மேற்பட்ட மீனவர்கள் அதனால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

அவர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்திய ஜனநாயகம் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாகவும், ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே மதம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் "இந்துத்துவா சக்திகள்" வெற்றி பெற்றால் அது அழிந்து விடும் என்றும் அவர் கூறினார்.



# மன்னார் கடற்பரப்பில் கைதான 18 இந்திய மீனவரும் விடுதலை!

(மன்னார் நிருபர்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் மன்னார் நீதி மன்றத்தினால் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் மன்றில் நேற்றைய தினம் புதன் கிழமை 3 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

பணிப்பாளரின் அனுமதியின்றி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டமை, இலங்கைக் கடற்பரப்பில் கடற் தொழிலில் ஈடுபட்டமை மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை மடித் தொழிலை முன்னெடுத்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரணைக்கு உட்படுத்திய நீதிவான் முதலாம் மற்றும் இரண்டாம் குற்றச்சாட்டுகளுக்கு 12 மாதங்களும், 3 ஆவது குற்றச்சாட்டுக்கு 6 மாதங்களும் என 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை விதித்து அவர்களை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்தார்.

மேலும் படகு தொடர்பான வழக்கு விசாரணை மார்ச் மாதம் 20 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. இதன் போது அன்றைய தினம் படகின் உரிமையாளரை மன்றில் முன்னிலையாகுமாறு மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் ஊடக மிரிஹான நிலையத்துக்கு அனுப்பப்பட்டு நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு ட்ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகக் கடற்றொழிலாளர்கள் 18 பேர் கடந்த 16ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 கடற் தொழிலாளர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு ட்ரோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற் தொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகளின் பின்னர் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் 17 ஆம் திகதி புதன் கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமூக ஊடகச் செயற்பாட்டாளர் பியத் நிகேஷலவிற்குப் பிணை!

கைது செய்யப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷலவை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சமூகச் செயற்பாட்டாளர் பியத் நிகேஷல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினால் கடந்த திங்கள் கிழமை கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை, பொதுமக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையிலான காணொலிகளை வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷலவை கைது செய்தோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டம்சியை அடுத்து அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த கொழும்பு கோட்டை பிரதான நீதிவான், 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் அவரை விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.






# அநுராதபுரம் குற்ற விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் உயிரிழப்பு!

## விசாரணைக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்

அநுராதபுரம் குற்ற விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உயிரிழந்தமை தொடர்பிலான விசாரணைகளுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

சந்தேகநபர் மீது பொலிஸார் தாக் குதல் மேற்கொண்டுள்ளனரா என்பது தொடர்பில் பிரேத பரிசோதனை அறிக் கையினூடாக தெரியவரும் என பிர தேசத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு முன்னெடுக் கப்பட்ட சுற்றிவளைப்பில், 80 கிராம் ஹெரோயினுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் ஒருவர், அநுராத புரம் பொலிஸ் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, திடீர் சுகவீன முற்ற நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி 22 வயதான சந்தேகநபர் உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் நீண்டகாலமாக போதைபொருளுக்கு அடிமையாகி யுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.



# அரை ஏக்கர் கஞ்சா தோட்டம் தணமல்வில பிரிவில் சிக்கியது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தணமல்வில பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் குழுவினர் தமது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்தேகத்திற்கிட மான பகுதிகளில் மேற் கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் அரை ஏக்கர் கஞ்சா தோட்டம், கசிப்பு மற்றும் காய வைத்த கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ள மையுடன், சந்தேகத்தின் பேரில் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தணமல்வில பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சூரிய ஆற பிரதேசத்தில் மரக்கறி தோட்டத்திற்கு மத்தியில் சுமார் 6 அடி உயரமான 3,921 கஞ்சாச் செடிகளுடன் சந்தேக நபரொருவரும், கிதுல்கொட மற்றும் கோமலிகம பிர தேசங்களில் கசிப்பு தயாரிப்பதற் கான 45,000 மில்லி லீற்றர் ஸ்பிரிட் மற்றும் 2 கிலோ 200 கிராம் காய வைத்த கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தணமல்வில பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# தேசபந்து தென்னகோனின் நியமனத்தை தடுக்கக் கோரும் மனுக்கள் பரிசீலனைக்கு!

பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் தேசபந்து தென்ன கோனைப் பொலிஸ்மா அதிபராக நிய மிப்பதைத் தடுக்கும் வகையில், இடைக் காலத்த டையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை எதிர்வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித் துள்ளது.

எஸ். துரைராஜா, காமினி அமர சேகர மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக் கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மனுக்கள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின், பெப்ரவரி 22 ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் அவற்றைத் தாக்கல் செய்ய வேண்டும் என மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட சில தரப்பினரால் இந்த மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், ஜனாதிபதி



சட்டத்தரணி ஷமில் பெரேரா, ஜனாதி பதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகினர். பிரதிவாதியான தேசபந்து தென்ன கோன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜரானார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக தேசபந்து தென்னகோன், சட்டமா அதி பர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன மற்றும் அவர் தலைமையி லான அரசமைப்பு பேரவை ஆகிய தரப்புகள் பெயரிடப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்ன கோன், பொலிஸ்மா அதிபராக நியமிக் கப்படுவதற்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தாக்கல் செய்த மனுவும் நேற்று பிரியந்த ஜயவர்தன, ஏ.எச்.எம். டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி▼

இந்த மனுவை பெப்ரவரி 7 ஆம் திகதி மீண்டும் பரிசீலிப்பதற்கு நீதியர சர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

# ஜகத் பிரியங்கரவை எம்.பியாக நியமித்து வர்த்தமானி வெளியீடு

ஜகத் பிரியங்கரவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானி நேற்று வெளியி டப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மறைவினால் ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு இந்தப் புதிய நியம னம் வழங்கப்பட்டுள்ளது என வர்த்த மானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் உயிரி ழந்திருந்தனர்.



# அதிவேக வீதிகளில் புதிய விதிமுறைகள்

அதிவேக வீதியைப் பயன்படுத்துவதற்கான புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தவுள்ளோம் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்கீழ் குறைந்தபட்ச வேகக் கட்டுப்பாடும் வர்த்தமானியின் ஊடாக அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2 வாரங்களுக்குள் மேற்படி விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



# பெரும்போக நெல் கொள்வனவு அனுமதி நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இல்லை

பெரும்போக நெல் கொள்வனவிற்கான அனுமதியை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்காதிருக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி மொத்த கொள்வனவாளர்கள் மூலம் நெலைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

பெரும்போக நெல் கொள்வனவிற்காக அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி மொத்த கொள்வனவாளர்களுக்கு சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்கீழ் 900 கோடி ரூபா கடன் தொகை வழங்கப்பட்டவுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் நெலைப் பிணையாக வைத்து சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி மொத்த கொள்வனவாளர்கள் கடனை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2024




இன்றைய நாள் சிறப்பாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் வளர்ச்சிக்கான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள். புதிய மனிதர்களுடனான தொடர்புகள் இன்று ஏற்படும்.

உங்கள் பணியில் வளர்ச்சி ஏற்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை ஃ காதலை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களின் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




புத்திசாலித்தனமாக திட்டமிடுவதன் மூலம் இன்று வெற்றி காணலாம். ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம வழிபாடு உங்களை தீங்கிலிருந்து காப்பாற்றும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காதது போல உணர்வீர்கள். நீங்கள் நேர்மறையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சில முக்கிய பிரச்சினைகளை கையாள வேண்டியிருக்கும்.உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை பாதிப்பை ஏற்படுத்தும். இன்று சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர வீர்கள். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்க்கவும்.




நீங்கள் செயல்களை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் இன்னும் முயல வேண்டும்.

இன்று நல்ல பலன்களைக் காண நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். இதன் மூலம் நீங்கள் அதிகப்படியான பணிகளை சமாளிக்க முடியும்.

உங்கள் உணர்ச்சிபூர்வமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை பயன்படுத்துவீர்கள். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.




இன்று அதிகப்படியான செயல்கள் காணப்படும். அவைகளை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும்.

நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியைப் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள். இன்று புதிய முதலீட்டிற்கு திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் தொடர்பாடலில் பிரச்சினை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகளில் கவனம் தேவை.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. அதன் காரணமாக பதட்டம் ஏற்படும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

உங்கள் நேர்மை மற்றும் உண்மை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும்.இதனால் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

தேவையற்ற சில விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய நேரும். அதனால் இன்று சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

பதட்டம் மற்றும் ஓய்வின்மை காரணமாக இன்று களைப்பாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் திறமை மற்றும் அறிவை வளர்த்துக் கொள்ளும் நாள். அதே சமயத்தில் உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

நீங்கள் பணயில் வெற்றி காண பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். இல்லாவிடில் வெற்றி காண்பது அரிது. பணியில் வெற்றி காண அதனை முன்கூட்டி அறிந்து வைத்திருப்பது நல்லது.

நட்பான பேச்சின் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் அது அவ்வளவு எளிதன்று. உணர்ச்சிவசப்படும் நிலை உறவின் இனிமையை பாதிக்கும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் இன்று பணம் சேமிக்க இயலாது. இன்று பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் செயல்களுக்கு தக்க பலன்கள் கிடைக்காது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பொறுமையும் நேர்மறை அணுகுமுறையும் அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருப்பதற்கு எண்ணெய் மற்றும் கார உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று உங்களுக்கு சிறிது அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் தந்தையின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிக்க நீங்கள் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டும். உங்கள் திறமையும் நேர்மையும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுகுவது சிறந்தது. இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2024

## தனுசு



இன்று சிறிது தடைகளுக்குப் பின் வெற்றியைக் காண்பீர்கள். என்றாலும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் மட்டுமே இன்று நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைக் காண முடியும்.

கடின உழைப்பு மூலம் நீங்கள் இன்று வெற்றி பெற இயலும். உங்கள் பணிகளை விரைவில் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து நட்பாக பழகுவதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்படுத்தலாம். இதன் மூலம் நல்லுறவும் உறவில் திருப்தியும் ஏற்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

முறையாக ஓய்வெடுப்பதன் மூலம் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## கும்பம்



இன்று சவால்கள் நிறைந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தவறுகளை அடுத்தவர் சுட்டிக் காட்டாமல் இருக்க பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக உறவில் குழப்பம் ஏற்படலாம். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பயணத்தின் போது பண இழப்பு நேரலாம்.

ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## மகரம்



முறையான முயற்சி உங்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உதவும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக இல்லா விட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நண்பர்களின் தொடர்பு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். ஆனால் நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது உங்கள் பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

உறவில் சிறிது அனுசரித்துப் போவது சிறந்த பலனைத் தரும். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இது உதவும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். என்றாலும் பணத்தை சம்பாதிக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும் என்ற ஆவல் உங்களிடம் இருக்கும்.

## மீனம்



உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது உகந்த நாள். பழைய நண்பர்களை சந்திப்பது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பணியில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும்.

நம்பிக்கையான எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் உற்சாகமாக்கிக் கொள்ளலாம். இந்த உணர்ச்சி உறவின் சுணக்கங்களை நீக்கி விடும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சேர்க்கும் வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் வரும் பணத்தை சேமிப்பீர்கள்.

வயிறு உப்பசம் காரணமாக இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். உணவில் கவனம் தேவை.

